# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்


எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 87/மா/2023**
**நாள்: 09.05.2023**

திரு. R. மயில்சாமி,
புதுவிளாங்குடி,
மதுரை. – முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையர்,
மதுரை மாநகராட்சி,
மண்டலம் (3) மத்தியம்,
மதுரை. – எதிர்மனுதாரர்

மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, மனை எண்.5ல் வசிக்கும் திரு. R. மயில்சாமி என்பவரின் 07.01.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 11.01.2023–ல் பெறப்பட்டு 87/மா/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, மனை எண் 5ல் வசிக்கும் திரு. R. மயில்சாமி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள 07.01.2023 நாளிட்ட தனது மனுவில் :

"மதுரை மாநகராட்சி மண்டலம்-3 (மத்தியம்)க்கு உட்பட்ட பைபாஸ் சாலை (பொன்மேனி மெயின் ரோடு) கதவு எண்.195-ல் இயங்கி வரும் கணேஷ் பிரியா மருத்துவமனை கட்டிடம் தரை தளம் மற்றும் நான்கு அடுக்கு மாடி கொண்டதாகும். இம்மருத்துவமனையில் பல அறைகளும், பல படுக்கைகளும் கொண்டவை . இதே மருத்துவமனைக்கு சிகிச்சை பெற வரக்கூடியவர்களும் பார்வையாளர்கள் வரும் வாகனத்தை நிறுத்துவதற்கு (Parking) இடம் ஏதும் இல்லாததால் வாகனத்தை சாலையில் நிறுத்த வேண்டியுள்ளதால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது.

இக்கட்டிடத்திற்கு முழுமையான அளவீடு செய்யாமல் சொத்துவரி கணக்கீடு செய்யப்பட்டு வரிவசூல் செய்வதால் மாநகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டு வருகிறது. மேலும் இங்கு பணிபுரியும், மருத்துவர், செவிலியர், அலுவலர்கள், துப்புரவுத் தொழிலாளர்

மற்றும் காவலருக்கு தொழிலாளர் வரி முறையாகவும் வசூலிக்கப்படாததால் வருவாய் இழப்பீடு ஏற்படுகிறது.

1. கணேஷ் பிரியா மருத்துவமனை பொதுமக்கள் பயன்பாட்டு கட்டிடம் என்பதால் தமிழ்நாடு பொது கட்டிடங்கள் (உரிமம்) சட்டம் 1965-ன் பிரிவு 2 (8)ன்படி (Section 2(8) of the Tamilnadu Public Building (Lincensing) Act 1965) அனுமதி பெறாமல் செயல்பட்டும், அரசு சட்டத்தை கடைபிடிக்காமல் சட்ட விதி மீறி செயல்படுகிறது.

2. மேலும் பொது மக்கள் பயன்பாட்டு கட்டிடம் என்பதால் 1973-ஆம் ஆண்டைய தமிழ்நாடு நகர் ஊரமைப்பு திட்ட இயக்கத்தில் (Directorate of town and Country Planning) -ன்படி ஒப்புதல் பெறாமல், சட்டத்திற்கு புறம்பாக மருத்துவமனை செயல்படுவதை மாநகராட்சி அதிகாரிகள் கண்டு கொள்ளவில்லை இது குறித்து புகாரை 31/12/2022 தேதியில் பதிவு தபாலில் உதவி ஆணையர் மண்டலம் 3 (மத்தியம்) ஆணையர், மதுரை அவர்களுக்கு மனு அனுப்பி உள்ளேன். இதுவரையிலும் நடவடிக்கை எடுக்கவில்லை.

3. மண்டலம் - 3 (மத்தியம்) அலுவலகத்தில் நிர்வாக அலுவலர் திரு. சுரேஷ் பாபு அவர்கள் கட்டிட உரிமையாளர்களிடம் மறைமுகமாக கையூட்டல் பெற்றுக் கொண்டு நடவடிக்கை எடுக்க முன்வருவது இல்லை. இவர் வருமானத்துக்கு மீறி சொத்து சேர்த்துள்ளதாக தெரியவருகிறது. இவரை லஞ்ச ஒழிப்பு கண்காணிப்பு துறையின் மூலம் கண்காணிக்க உத்தரவிடுமாறு வேண்டுகிறேன்.

மேற்படி கணேஷ்பிரியா மருத்துவமனை விதிகளுக்கு மீறி கூடுதலாக கட்டிடம் கட்டியதை கண்காணிக்க தவறியும், நிர்வாகத்திடம், சொத்துவரி, தொழிலாளர் வரி முழுமையாக வசூலிக்கப்படாததால் மதுரை மாநகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்படுத்தியதற்கு காரணமானவர்கள் மீது துறைரீதியான கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டும். கணேஷ்பிரியா மருத்துவமனை உரிய துறைகளிடம் உரிய அனுமதி பெறாமல் சட்டத்திற்கு புறம்பாக செயல்படும் மருத்துவமனையை அகற்றியும் (remove) நகர் ஊரமைப்பு சட்டம் 1971-ன்படி பிரிவுகள் 56 (1) மற்றும் 57உடன் படிக்கப்பட்ட பிரிவு 85-ன்கீழ் Stop Work Notice / Notice a Calling a approved Plan அறிவிப்பினையும் மூடி முத்திரையிடுதல் Lock and Seal and Demolition Notice, வழங்கி மற்றும் அமலாக்க நடவடிக்கை விரைந்து எடுக்க உத்தரவிடுமாறு மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தை மிகத் தாழ்மையுடனும், பணிவன்புடனும் வேண்டிக் கொள்கிறேன் எனத் தெரிவித்துள்ளார்.

**மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு, மதுரை மாநகராட்சி உதவி ஆணையரிடம் கோரப்பட்டது அவர் தனது 19.04.2023 நாளிட்ட அறிக்கையில்:**

மனுதாரர் மனு குறித்து தெரிவிப்பது யாதெனில் கட்டிடம் சம்பந்தமாக விசாரணை அறிக்கை தயார் செய்ய வார்டு 69 உதவிப் பொறியாளருக்கும் சொத்துவரி மற்றும் தொழில்வரி சம்பந்தமாக வருவாய் பிரிவிற்கும் குறிப்பு பெற அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. கணேஷ் பிரியா மருத்துவமனையிலிருந்து வரைப்படம் கோரப்பட்டு, வரைபடம் மற்றும் கட்டிட அனுமதியின் இறுதிப் பக்க நகல்கள் பெறப்பட்டுள்ளது. மேலும் இப்பொருள் தொடர்பாக விளக்கம் தெரிவித்து கடிதம் மருத்துவமனையிடமிருந்து கடிதம் பெறப்பட்டுள்ளது. இம்மனு சம்பந்தமாக கட்டிட அனுமதி கோப்பு மண்டலம் 1 உதவி ஆணையாளருக்கு மூலக் கோப்பு வேண்டி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. கணேஷ் பிரியா மருத்துவமனையிலிருந்து பெறப்பட்ட கடிதத்தில் நோயாளிகளின் வாகனங்களை நிறுத்துவதற்காக Ground Floor-ல் 2000 சதுரடி உள்ளதாகவும் Government of Tamil Nadu Medical and Rural Health Service கடித எண்.CEA-MDUALL200008095. Tamil Nadu Fire and Rescue service dept. கடித எண்.336/2022,TNPCB/MDU/A/

2019-2018-337750608. Resustainable Health Care Solutions கடித எண்.1035571 மூலம் உரிய Liceanse பெற்றிருப்பதாக தெரிவித்துள்ளார்கள். மேலும் மருத்துவமனையால் சொத்துவரி புதிய வரி விதிப்பு எண்.115/069/901911 பழைய வரி விதிப்பு எண்.115/331818-க்கு மொத்தம் 21558 சதுரடிக்கு வரி விதிப்பு செய்யப்பட்டு 2022-2023 இரண்டாம் அரையாண்டு வரை வரி செலுத்தப்பட்டுள்ளது எனவும், தொழில் வரி சம்பந்தமாக ஏற்கனவே கணேஷ் பிரியா மருத்துவமனைக்கு தொழில் வரிக்கு தேவையான ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார்

**மதுரை மாநகராட்சி மண்டலம்–3ன் நிர்வாக அலுவலர் தன்னுடைய 19.4.2023 நாளிட்ட கடிதத்தில் ;**

"மதுரை மாநகராட்சியில் கட்டிட அனுமதி முழுமையாக Online மூலம் அனுமதி வழங்கப்பட்டு வருகிறது. கட்டிட உரிமையாளர்களும் நிர்வாக அலுவலருக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. கட்டிட அனுமதி வழங்கும் பணிகள் யாவும் மதுரை மாநகராட்சி வார்டு உதவிப் பொறியாளர்களால் கள ஆய்வு செய்யப்பட்டு உதவி செயற் பொறியாளர் (திட்டம்) உதவி ஆணையாளர் மூலமாக செயற்பொறியாளர் (திட்டம்) மைய அலுவலகத்திலுள்ள மைய திட்டப் பிரிவின் மூலமாக வழங்கப்பட்டு வருகின்றன. கட்டிட அனுமதி வழங்கப்பட்ட காலத்திலும், வரி விதிக்கப்பட்ட காலத்திலும் நான் மண்டலம் - 1 (அன்றைய மேற்கு மண்டலம்) அலுவலகத்தில் பணியாற்றவில்லை. திரு. R. மயில்சாமி என்பவர் சமூக ஆர்வலர் என்று கூறிக்கொண்டு மதுரை மாநகராட்சியின் பல்வேறு மண்டல அலுவலகங்களுக்கும், பிற அரசு நிறுவனங்களுக்கும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் மனு செய்து தனக்கு தொடர்பில்லாத தகவல்களையும், கேள்வி வடிவிலும் பல்வேறு வினாக்களை எழுதி அனுப்பி நிர்வாக நடவடிக்கைகளை தொடர்ந்து சீர்குலைத்து வருகிறார். தனக்கு சாதகமான தகவல்கள் கிடைக்கப் பெறவில்லை என்பதால், தொடர்ந்து நிர்வாக அலுவலர் (பொ) என்ற நிலையில் கெட்ட எண்ணத்துடனும், தீய நோக்குடனும் செயல்படுகிறார் என்றும், கையூட்டல் பெற்றுக்கொண்டு நடவடிக்கை எடுக்க முன் வருவதில்லை என்றும், வருமானத்துக்கு மீறி சொத்து சேர்த்துள்ளதாக தெரியவருகிறது என்று ஆதாரமற்ற முறையிலும் பொறுப்பற்ற முறையிலும் குற்றம் சாட்டியுள்ளார். நான் மதுரை மாநகராட்சியில் கடந்த 30 ஆண்டுகள் பணிக்காலத்தில் எனது பணியில் நேர்மையுடனும், பொறுப்புணர்வுடனும், கடமை உணர்வுடனும் என்னை அர்பணித்து செயல்பட்டு வருகிறேன். என்மீது கடந்த காலங்களில் எந்தவிதமான சிறு குற்றச்சாட்டிற்கும் ஆளாகாமல் தொடர்ந்து பணியாற்றி வருகிறேன். எனது தந்தை வசித்து வந்த அதே வீட்டில் எனது தாயார் மற்றும் குடும்பத்துடன் வசித்து வருகிறேன்.

இவ்வாறு ஒரு அரசு அலுவலர் மீது தொடர்ந்து ஆதாரமற்ற முறையில் குற்றச்சாட்டு சுமத்துவது வன்மையாக கண்டிக்கத்தக்க செயலாகும். எனவே இந்நிலை தொடராமல் இருக்க மனுதாரர் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்".

**முறையீட்டு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 20.04.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 11.04.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

**மனுதாரர் 20.04.2023 அன்று நாகர்கோவில் சர்க்யூட் ஹவுஸில் நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி பின்வருமாறு தன்னுடைய வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.**

"மதுரை மாநகராட்சி, மண்டலம், 3 (மத்தியம்) பைபாஸ் சாலை (பொன்மேனி மெயின்ரோடு) கதவு எண்.195ல் இயங்கிவரும் கணேஷ் பிரியா மருத்துவமனை கட்டிடம் தரை தளம் மற்றும் நான்கு மாடிகளை கொண்டதாகும். இம் மருத்துவமனை உரிய துறைகளின் அனுமதி பெறாமல் இயங்கி வரும் இம்மருத்துவமனையில் வாகன நிறுத்த வசதி இல்லாத காரணத்தால் அங்கு கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. மேற்கண்ட கட்டடத்திற்கு முறையான கட்டட அனுமதியும் இல்லை.

மேற்கண்ட மருத்துவமனை முறையாக சொத்து வரியும் மாநகராட்சிக்கு செலுத்தவில்லை. மேலும் அங்கு பணிபுரியும் மருத்துவர்கள், செவிலியர்கள், அலுவலர்கள், பணியாளர்களிடம் முறையாக சொத்து வரி வசூலிக்கப்படாததாலும் மதுரை மாநகராட்சிக்கு பெருத்த வருவாய் இழப்பீடு ஏற்பட்டுள்ளது.

எனவே முறையாக கட்டட அனுமதி இல்லாமல் இயங்கிவரும் மேற்கண்ட மருத்துவமனையின் மீது தேவையான நடவடிக்கை எடுத்திடவும், அம்மருத்துவமனையிடமிருந்து சொத்துவரி மற்றும் தொழில் வரி ஆகியவற்றை முறையாக வசூலிக்கவும் தேவையான நடவடிக்கை எடுத்திட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்'' எனத் தெரிவித்துள்ளார்.

**மதுரை மாநகராட்சி, உதவி பொறியாளர் மற்றும் உதவி வருவாய் அலுவலர் ஆகியோர் 20.04.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளனர்.**

"மனுதாரர் தனது புகார் மனுவில் குறிப்பிட்டிருந்த கணேஷ்பிரியா மருத்துவமனையை நேரில் கள ஆய்வு செய்ய ஏதுவாக மருத்துவமனையிலிருந்து கட்டட அனுமதி நகல் கோரப்பட்டுள்ளது. ஆனால் அவர்களிடமிருந்து இன்னும் வரைபட நகல் பெறப்படவில்லை. கட்டட வரைபட அனுமதியை அளிக்காததால், அடுத்தகட்ட மேல்நடவடிக்கையாக மேற்கண்ட மருத்துவமனைக்கு இன்னும் நோட்டீஸ் வழங்கப்படவில்லை என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும், மேற்கண்ட கட்டடத்தின் 21558 சதுர அடிக்கு 2022–23ம் ஆண்டிற்கான இரண்டாம் அரையாண்டு வரை சொத்து வரி விதிக்கப்பட்டுள்ளது என்பதையும் மேலும் தொழில் வரியைப் பொறுத்தவரை ஏற்கனவே மேற்கண்ட மருத்துவமனையின் ஆவணங்களை மாநகராட்சியில் சமர்ப்பிக்கும்படி மருத்துவமனையை கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது, ஆவணங்களின் அடிப்படையில் தொழில் வரி மேற்கண்ட மருத்துவமனைக்கு விதிக்கப்படும் என்கின்ற விவரத்தையும் சமர்ப்பிக்கிறோம்.

மேலும் மதுரை மாநகராட்சி மண்டலம் 3–ன் உதவி ஆணையரின் அறிக்கையில் கண்டுள்ள விவரங்களையும் எங்களது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறோம்'' எனத் தெரிவித்துள்ளனர்.

**முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் உதவி ஆணையரின் அறிக்கை மற்றும் மதுரை மாநகராட்சி உதவிப் பொறியாளர் மற்றும் உதவி வருவாய் அலுவலர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன:**

மனுதாரர் திரு. R. மயில்சாமி தன்னுடைய மனுவில் மதுரை மண்டலம் -3, பொன்மேனி மெயின் ரோட்டில் கதவு எண்.195ல் கணேஷ்பிரியா என்ற மருத்துவமனை திட்ட அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டுள்ளதாகவும், அங்கு பணிபுரியும் ஊழியர்களுக்கான தொழில் வரி வசூலிக்காததாலும் மருத்துவமனைக்கு சொத்துவரி வசூலிக்காததாலும், மதுரை மாநகராட்சிக்கு வருவாய் இழப்பீடு ஏற்படுவதாகவும், எனவே உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார்.

மதுரை மாநகராட்சி, மண்டலம் -3ன் உதவி ஆணையர் தன்னுடைய 19.4.2023 நாளிட்ட அறிக்கையில் மேற்கண்ட மருத்துவமனையின் வரைபடம் மற்றும் கட்டிட அனுமதிக்கான இறுதி பக்க நகல்கள் பெறப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார். மருத்துவமனையின் நிருவாகம் கட்டிட வரை படத்தின் முழு நகலினை அளிக்காமல் இறுதி பக்க நகலினை அளித்திருப்பது உள்நோக்கம் கொண்ட செயலாக கருதப்படுகிறது. சுமார் நான்கு மாதங்கள் கடந்துவிட்ட நிலையில், கட்டிட வரைபட நகலினை மருத்துவமனை நிர்வாகத்திடமிருந்து பெறாமல் இருப்பது மதுரை மாநகராட்சி மண்டலம்-3ன் அலுவலர்களின் மெத்தனம் போக்கே காரணம் என்று இம்முறைமன்றம் சுட்டிக்காட்ட விரும்புகிறது. மேலும் இவ்வரைப்படத்தின் படிதான் மேற்கண்ட மருத்துவமனை கட்டப்பட்டுள்ளதா என அறிய கள ஆய்வு மேற்கொள்ளப்படவில்லையென தெரிகிறது. மேலும், மருத்துவமனையில் வாகன நிறுத்துவதற்காக தரைத்தளத்தில் 2000 ச.அடி உள்ளதாகவும் முறையான உரிமம் சம்பந்தப்பட்ட துறையிடமிருந்து பெறப்பட்டுள்ளதாக மருத்துவமனை தெரிவித்துள்ளதை குறிப்பிட்டுள்ளார். ஆனால் இவற்றையெல்லாம் மதுரை மாநகரட்சி அலுவலர்கள் கள ஆய்வு செய்து உறுதிபடுத்தப்படவில்லை. மருத்துவமனையின் கூற்றை அப்படியே இம்முறைமன்றத்திற்கு தெரிவித்திருப்பது மதுரை மாநகராட்சியின் அலுவலர்கள் தங்கள் பணியில் எவ்வளவு சுணக்கமாக உள்ளார்கள் என்பதை காட்டுகிறது என்று இம்முறைமன்றம் சுட்டிக்காட்ட விரும்புகிறது. மேற்கண்ட மருத்துவமனைக்கு 21558 ச.அடிக்கு வரிவிதிப்பு செய்யப்பட்டு மே 22–23 இரண்டாம் அரையாண்டு வரை வரி செலுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். மேலும் அம்மருத்துவமனைக்கு 19.4.23 தேயிட்டு அனுப்பிய கடிதத்தில் தொழில் வரி வதிப்பு ஏதும் நிர்ணயம் செய்யப்படவில்லையெனவும், ஏற்கனவே படிவம் வழங்கப்பட்டும், பூர்த்தி செய்யப்பட்ட படிவம் பெறப்படாத காரணத்தினால், கடந்த மார்ச் 2023 புதிய படிவம் அனுப்பப்பட்டுள்ளது எனவும் அதனை பூர்த்தி செய்து சமர்ப்பிக்குமாறு கோரியுள்ளார். மேற்கண்ட மருத்துவமனை 7 ஆண்டுகளாக செயல்பட்டு வந்தும், மதுரை மாநகராட்சி அலுவலர்கள், அம்மருத்துவமனையிடமிருந்து தொழில்வரி விதிப்பு பற்றிய படிவம் பெறாதது மதுரை மாநகராட்சி கள ஆய்வாளர்கள் பணியில் எவ்வாறு மெத்தனமாக செயல்படுகிறார்கள் என்பதை காட்டுகிறது என்று இம்முறைமன்றம் தன்னுடைய கடுமையான அதிருப்தியை பதிவு செய்கிறது.

மருத்துவமனைக்கு சொத்துவரி விதிக்கப்பட்டு அம்மருத்துவமனை அதனை செலுத்தியுள்ள நிலையில், மனுதாரர் தன்னுடைய புகார் மனுவில் எவ்வித ஆதாரமும் சமர்ப்பிக்காமல் உத்தேசமாக மருத்துவமனைக்கு சொத்து வரி விதிக்கப்படவில்லையென குற்றம் சாட்டுவது மிகவும் கண்டிக்கத்தக்கது. மனுதாரர் மீண்டும் மீண்டும் இம்முறைமன்றத்திற்கு சமர்பிக்கும் புகார் மனுக்களில் எவ்வித ஆதாரமும், சமர்ப்பிக்காமல் இம்முறைமன்றத்திற்கு புகார் தெரிவிப்பது ஏற்புடையதல்ல. எனவே மனுதாரரால் வருங்காலங்களில் சமர்ப்பிக்கப்படும் புகார் மனுக்களில் தன்னுடைய குற்றச்சாட்டுகளுக்கு உரிய ஆதார ஆவணங்களை இம்முறைமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும் என்று இம்முறைமன்றம் அறிவுரை வழங்கி ஆணையிடுகிறது. ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை தெரிவிக்கும் மனுதாரரின் செயல் மிகவும் கண்டிக்கத்தக்கது.

2014-ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டம் மற்றும் விதிகளில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் குறிப்பாக:-

7. The Ombudsman shall perform all or any of the following functions, namely –

(i) enquire into any written complaint from the Government or that has come to the notice of the Ombudsman in which corruption or maladministration of a public servant or a local body is alleged;

(ii) (c) Where the irregularity is due to wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules.

மற்றும்

பிரிவு 12 (i) (c) refer the complaint to the appropriate authority to take disciplinary action for willful negligence or dereliction of duty of any officer or employee of the local body – படி,

பின்வருமாறு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது:-

மதுரை மாநகராட்சி மண்டலம் 3ன் உதவி பொறியாளர் மற்றும் உதவி வருவாய் அலுவலர் ஆகியோர் தங்களுடைய வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு மேற்கண்ட மருத்துவமனையின் முழு கட்டட வரைபட நகலினை விரைந்து பெற்று அதனை ஆய்வுக்கு உட்படுத்தி, அனுமதிக்கு மாறாக மருத்துவமனை கட்டடம் கட்டப்பட்டிருந்ததால் உரிய சட்ட பூர்வமான நடவடிக்கை எடுக்குமாறு மதுரை மாநகராட்சி மண்டலம் - 3ன் உதவி ஆணையருக்கு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது. மேலும், மேற்கண்ட மருத்துவமனையிடமிருந்து அங்கு பணிபுரியும் ஊழியர்களின் தொழில்வரி குறித்த தகவலை விரைந்து பெற்று சட்ட பூர்வமான தொழில் வரியை விதித்து வசூலிக்கவும், இம்முறைமன்றம் ஆணையிடுகிறது. மேற்கண்ட மருத்துவமனை 7 ஆண்டுகளாக செயல்பட்டும், அங்கு பணிபுரியும் ஊழியர்களிடம் தொழில் வரி சம்மந்தமாக தகவலை பெற தாமதம் செய்த சம்பந்தப்பட்ட மதுரை மாநகராட்சி அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு மதுரை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

The replies of the Assistant Commissioner of the Zone -3 of the Madurai Corporation, the Assistant Engineer and Assistant Revenue Officer who appeared before the Forum for hearing are contradictory and different. The response of the Corporation that the Hospital authorities have not yet given their original Building plan approval in full but only the last page piecemeal is shocking, incredible and suspicious per se. How could an institution like this Hospital behave like this and what is the role of the Corporation officials of the zone in this drama are the issues before this Forum? The whole drama staged by the Madurai Corporation. Zone 3 is condemned for this casual slack and indifferent reply that casts serious doubts on the reliability of the report of the Assistant Commissioner, Administrative Officer and the officials who deposed before this Forum during hearing. The Forum directs the Commissioner, Madurai Corporation to ensure that the Hospital submits the original plan approval with the sketches and thereafter order measurement of the premises as per the approved plan and if during the field inspection and cross-checking any deviations are detected, action as per the Town and Country planning Act, Rules and Regulations should be taken. This exercise should be completed within one month failing which the DMA is directed to launch necessary disciplinary action against the delinquent officials responsible for non-compliance and dubious dereliction of duties. Similarly, Professional Tax demand and collection should be as per the employee strength of the Hospital and as per the existing Madurai Corporation slabs of Professional Taxation to ensure proportionate revenue to the

Corporation account. The delinquent officials who have not taken cognizance of the deviations committed by the Hospital in the Building plan execution, if identified during measurements, should be proceeded against with strict disciplinary action with no leniency whatsoever.

2023-ஆம் ஆண்டு மே திங்கள் 9-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. R. மயில்சாமி,
மனை எண்.5, அய்யப்பன் தெரு,
செம்பருத்தி நகர்,
புதுவிளாங்குடி, மதுரை – 18.
2. ஆணையர்,
மதுரை மாநகராட்சி,
3. உதவி ஆணையர்,
மண்டலம் - 3, (மத்தியம்),
மதுரை மாநகராட்சி,
மதுரை – 625 001
4. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.
5. இணை இயக்குநர்
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக் குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

உதவிப் பதிவாளர்.